புறம்போக்கு நிலங்களிலுள்ள சிறிய மற்றும் பச்சை மரங்களை வெட்டினால் வனத்துறைச் சட்டத்தின்படி குற்றமாகும். ஆனால் சொந்த நிலங்களிலுள்ள பனை மரங்களை அவர்கள் வெட்டிக்கொள்ளலாம். அதைப்பற்றி அரசு ஒன்றும் நடவடிக்கை எடுக்காது. அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் உள்ள பச்சை மரங்களை வெட்டினால்தான் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடைபொத்தை குளத்திற்கு நீர்வரத்து

696.—]*வினா எண். 3293) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி பகுதியில் அமைந்துள்ள இடைபொத்தை குளத்திற்கு ஆதியான் குளத்திலிருந்து கால்வாய் அமைத்து மணிமுத்தார் பெருங்கால் தண்ணீர் பெறச் செய்யும் பணி எப்பொழுது துவங்கும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : இடைபொத்தை குளத்துக்கு ஆதியான் குளத்திலிருந்து கால்வாய் அமைத்து மணிமுத்தாறு பெருங்கால் தண்ணீர் பெறச் செய்யும் பணிக்கான செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.

நண்டலாற்றுக்குத் தாமதமாக நீர்வரத்து

697—*வினா எண்) 3809).—திரு. என். விஜயபாலன் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி தாலுகா 175 திருக்களாச்சேரி வட்டம் பாலூர் கிராமத்தில் பாயும் நண்டலாற்றிற்கு ஒரு மாதம் கழித்தே தண்ணீர் வருவதால் அப்பகுதி விவசாயம் பாதிக்கப் படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) வீரசோழன் ஆற்றிலிருந்து கோவிந்த களகம் உபரி நீர்ப்போக்கி மூலம் பாசன நீர் அவ்வப்போது வழங்கப்படுகிறது.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 175 திருக்காளச்சேரி வட்டம் பாலூர் கிராமத்திற்கு நண்டலாற்றிலிருந்து ஒரு மாதம் கழித்துத்தான்

தண்ணீர் வருகிறது. அது வீரசோழன் ஆற்றின் பாசனம் என்பதை விட நண்டலாற்றின் பாசனமாகவே இருக்கிறது. அங்கு 4 அடிதான் தண்ணீர் விடப்படுகிறது. அதுவும் புதுவை மாநிலத்தின் காரைக்கால் பகுதிக்குத் தான் பயன்படுகிறது. ஆகவே பாலூர் கிராமத்திற்குக் பயன்பட வேண்டுமென்றால் 6 அடி அளவிற்குத் தண்ணீர் தேக்கிவிடப்பட வேண்டும். அந்த அளவிற்கு அரசு செய்யுமா என்பதுடன், நண்டலாற்றின் வாய்க்காலை ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும் தர அரசு முன் வருமா எனவும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மூ. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் அந்த மாவட்டத்தில் பல இடங்களிலும் வடிகால்வாய்கள் தான் பாசனக் கால்வாயாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அந்த வகையிலே ஒன்றுதான் இந்த நண்டலாறு வடிகால் ஆறாக மாறி அதன் வாயிலாக அது பாசனத்திற்குப் பயன்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அது கடைமடைப் பகுதியாக இருப்பதால் 3 அல்லது 4 வார காலம் அங்கு தண்ணீர் வருவதற்கு ஆகிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அதற்கான மாற்று ஏற்பாடாகத் தான் வீரசோழன் ஆற்றிலிருந்து கோவிந்த களகம் உடரி நீர்ப் போக்கி மூலம் அவ்வப்போது தண்ணீர் விடப்படுகிறது. நீரேற்று இயந்திரங்கள் மூலமாக தண்ணீர் பெறுவது போன்ற ஒரு சில திட்டங்களைச் செயல்படுத்த முடியுமா என்ற அளவுக்கு சில யோசனைகளை, கோரிக்கைகளை அல்லது வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். அது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீரசோழன் ஆற்றிலிருந்து உபரிநீரை அங்கே தண்ணீர் பெறுவதற்காக திருப்பி விடப்படுகிறது என்று சொன்னார்கள். அங்கே போதிய அளவு தண்ணீர் கிடைக்கவில்லை என்பதும், விவசாயம் செய்து முடிகிற நேரத்தில் தண்ணீர் போய்ச் சேருகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் நண்டலாற்றின் வாய்க்காலைத் தடுக்க வேண்டும், அது புதுவை மாநிலத்தின் பி.டபிள்யூ,டி.-யின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. அவர்களுக்கு $2\frac{1}{2}$அடி தண்ணீரே போதுமானதாக இருக்கிறது. 4 அடி தண்ணீரை இங்கே திருப்பிவிடுகிறார்கள். ஆனால் பாலூர் வட்டத்திற்கு 6 அடி தண்ணீர் தேவைப்படுகிறது. அந்த 6 அடி தண்ணீர் கிடைப்பதற்கு அரசு நண்டலாற்றின் வாய்க்காலை வெட்டி ஆழப்படுத்தி, அந்தப் பகுதி கிராம மக்கள் விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா ? அல்லது வேறு மாற்று ஏற்பாடு ஏதேனும் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நண்டலாற்றின் வரலாற்றையே இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அரசிடத்தில் புள்ளி விவரங்கள் இல்லை. எனினும், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஏதேனும் அத்தகைய பணிகள் மேற்கொள்வதற்கு வாய்ப்பு இருப்பின் அவை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிகொண்டான் ஆற்றில் ரெகுலேட்டர் அமைத்தல்.

698—(*வினா எண். 4573.) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் வட்டம் முடிகொண்டான் ஆற்றில் சன்னாநல்லூர் அருகில் ரெகுலேட்டர் அமைத்து நெடுஞ்சேரியிலிருந்து குனாண்டிதரிசி வெளி வரை பாசன வசதியைப் பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நசுவினியாற்றை ஆழப்படுத்தல்.

699—(*வினா எண். 8910) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில், நசுவினியாறு, கடலில் கலக்கும் இடம் சுமார் 2 கி. மீட்டர் தூரத்தில் வளர்ந்துள்ள காடுகளை அகற்றி, ஆற்றை ஆழப்படுத்திட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில் நசுவினியாறு கடலில் கலக்கும் இடத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் வரையில் உள்ள பகுதிகளில் ஆற்றைச் சுற்றிலும் காடுகள்